**(கட்டுரைக்கான அறிமுகமும் நோக்கமும்)Introduction& Importance of this article.**

http://libcom.org இணையத்தளத்தில் வெளியான "Refuse the false choice "health or jobs", fight for a guaranteed income! - The example of ILVA in Taranto"

என்ற கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு வடிவாக" வேலை அல்லது உடல்நலம் என்கிற பொய் வாய்ப்பை மறு,வருமான உத்திரவாததிற்காக போராடு!" என்ற இந்த கட்டுரையை வெளியிட்டுள்ளோம். தங்களின் சுகாதாரத்திற்கான போராட்டத்தினை தொழிலாளி வர்கத்தினர் முன்னெடுக்கும் போதெல்லாம்"வேலையா அல்லது உடல்நலமா என்று மிரட்டியே பல வருடங்களாக முதலாளி வர்க்கமானது,தொழிலாளர்களை மிரட்டி லாபமடைந்தார்கள்.கடந்த அரை நூற்றாண்டு தொழில்யுக வரலாறு எங்கிலும் நாம் இதை நோக்கலாம்,மேலும் அதே யுக்தியை அவர்கள் இன்றுவரை கையாண்டு வெற்றியடைகின்றனர்.இந்நிலையில் கடந்த ஆண்டு இத்தாலி நாட்டிலுள்ள டொராண்ட்டோவில், தொழிலாளிகளுக்கும்,அப்பகுதியில் வசிக்கும் மக்களின் உடல்நலத்திற்கு பெரும்கேடு விளைவிக்கிற இல்வா தொழிற்சாலையை மூடக்கோரி அளித்த நீதிமன்ற தீர்ப்பினை தனது வழக்கமான யுக்தியின் மூலம் எதிர்கொள்ளஆலை முதலாளி முடிவுசெய்தார்.வழக்கமாக முதலாளித்துவ நலன்களுக்கு சப்பைக்கட்டும் தொழிலாளர்கள் சங்கத்தினரோடு கூட்டுசேர்ந்துகொண்டு ஆலையை மூடுவதற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கசெய்கின்றனர்.இந்நிலையில் முதலாளிவர்கத்தின் வழக்கமான சதியை முறியடிக்கும் முயற்சியாக,அந்த ஆலையைச் சேர்ந்த சில தொழிலாளர்கள்,பிற தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் சிலர்,அப்பகுதியில் வசிக்கும் மக்கள்,இளைஞர்கள்,வேலையற்றோர் போன்றோர்கள் ஒரு சிறு குழுவாக இணைந்து வேலை அல்லது உடல்நலம் என்கிற பொய் வாய்ப்பை தைரியமாக மறுத்து மாற்று வருமான உத்திரவாதத்திற்காக உறுதியாக போராடுகிறார்கள்.இப்போராட்டம் தனித்தன்மையுடையது.முதலாளிவர்கதிற்கு மரண அடி குடுக்கச்செய்வது.இத்தாலியில் துவங்கிய இப்புது போராட்ட வடிவத்தை தமிழ்ச்சூழலுக்கு அறிமுகம் செய்யும் முயற்சியாகவே,இம்மொழிபெயர்ப்பு கட்டுரை இங்கு

வெளிவருகிறது.முதலாளித்துவதிற்கு தேச எல்லைகள் என்ற வரம்புகள் கிடையாது.இத்தாலி என்றாலும் சரி இந்தியா என்றாலும் சரி முதலாளித்துவ உற்பத்தி முறையால் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினை உலகமெங்கிலும் ஒன்றாகத்தான் உள்ளது.அதே சமயம் முதலாளித்துவத்திற்கு எதிரான நமது அறைக்கூவலும் ஒன்றாகத்தான் உள்ளது

“உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்” ("*Workers* of the *world*, unite!)

---

**வேலை அல்லது உடல்நலம் என்கிற பொய் வாய்ப்பை மறு,வருமான உத்திரவாததிற்காக போராடு!**



ரிவா(RIVA )குழுமத்தைச் சேர்ந்ததும்,இத்தாலியின் மிகப்பெரிய உருக்கு தொழிற்சாலையுமுமான, இல்வா(ILVA)உருக்கு தொழிற்சாலையானது,2,000,00 மக்கள் வசிக்கும் டரண்டோ நகரின் மையத்தில் அமைத்துள்ளது.1961 கட்டப்பட்ட இந்த தொழிற்சாலை,பயன்பாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் மிகப்பழமையானதும்,அபாயகரமானதாகவும், கடும் சுற்றுச்சூழல் மாசை ஏற்படுத்திவருபவையாக இருந்துள்ளது. 30% வேலையில்லாதோர் வசிக்கும் பகுதியில்,இத்தொழிற்சாலையானது 11,500 தொழிலாளர்களுக்கு நேரடியாகவும், ஒப்பந்ததொழில் மூலம் 9500 தொழிலாளர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வழங்குகிறது.

இத்தொழிற்சாலை,ஆண்டு ஒன்றிற்கு 20 லட்சம் டன் மூலப்பொருளை 8 லட்சம் டன் இரும்பாக மாற்றும் கொல்திறனைக் கொண்டதாகும்.

இந்நிலையில்,நீண்ட விசாரனைக்குப்பின்,சுற்றுச்சூழலுக்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்திமைக்காக,இல்வா உருக்கு தொழிற்சாலையிலுள்ள,ஊது உலையை மூடவேண்டும் என டரண்டோ நீதிமன்றம் கடந்த ஆண்டு உத்தரவிட்டது.டையாக்சின்(Dioxine) போன்ற கடும் வேதியல் நச்சுகளை இத்தொழிற்சாலை பரப்புவதாக அளித்த உயர்மட்டவிசாரனைக் குழுவின் அறிக்கையின் பேரில் நீதிமன்றமானது, இல்வா நிறுவனத்தை கடுமையாக விமர்சித்து இத்தீர்ப்பை வழங்கியது.உற்பத்தியில் வெளியேற்றும் இவ்வேதியல் நச்சானது,இத்தொழிற்சாலைக்கு உள்ளே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், தொழிற்சாலைக்கு அருகாமையில் வசிக்கும் தொழிளார்களின் குடும்பங்களுக்கும் புற்றுநோயை ஏற்படுத்தும் வாய்ப்பினை அதிகரிக்கச் செய்துள்ளது.இத்தீர்ப்பு இறுதியானது.இத்தொழிற்சாலையை மூட வேண்டியதுதான்.கடந்த 13 ஆண்டுகளில், இச்சுற்றுசூழல் பாதிப்பால் 386க்கும் மேற்பட்ட மக்கள் இங்கு புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தார்கள் என்று அதிகாரவர்க நீதிமன்றங்கள் தெருவித்தது!உறுதிப்படுத்தப்பட்டதை விட ,இத்தொழிற்சாலையால் ஏற்படுத்தப்பட்ட சுகாதாரப் பாதிப்புகள் இன்னும் அதிகம்.

உடனே,இப்பகுதியின் இதயமாக இருக்கும் இத்தொழிற்சாலையை மூடினால்,அதில் வேலை செய்யும் அனைத்து தொழிலாளர்களும் வேலை இழப்பார்கள் ஆகையால் தொழிற்சாலையை மூடவிடக்கூடாது என்று கூறி தொழிலாளர்கள் சங்கம் மற்றும் இடதுசாரி கட்சிகள் அத்தொழிற்சாலையின் முதலாளியையும் இணைத்துக்கொண்டு போராட்டம் நடத்துகிறார்கள்.ஐக்கிய முன்னணி, வேலைநிறுத்தத்திற்கும் ஊர்வலத்திற்கும் அழைப்பு விடுக்கிறது.ரிவா குடும்பம் தனது அனைத்து இயக்குனரக பணியாளர்களையும் போராட்டக் களத்திற்கு அனுப்பி ஆலையை மூடுவதற்கு எதிரான வேலைநிறுத்த போராட்டத்தை சிதறாமல் பார்துக்கொள்ளவைக்கிறது.அதே சமயத்தில்,இத்தொழிற்சாலையின் முதலாளி,இத்தாலியிலுள்ள தனது அனைத்து நிறுவனங்களையும் மூடப்போவதாக

பயமுறுத்துகிறார்.இவையெல்லாம் எதிர்பார்த்ததைப்போல் வேலை செய்தது.எங்கு பார்த்தாலும் ஆலையை மூடுவதற்கு எதிரான வேலை நிறுத்தம் மற்றும் ஊர்வலங்கள்.முதலாளித்துவத்தை காப்பதில் முழுமையான வெற்றி கிட்டியது போல் தோன்றியது!

ஆலையை மூடுவதற்கு எதிராக வலுப்பெற்ற இப்போராட்டத்திற்கு எதிராக அந்த ஆலையைச் சேர்ந்த சில தொழிலாளர்கள்,பிற தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் சிலர்,அப்பகுதியில் வசிக்கும் மக்கள்,இளைஞர்கள் மற்றும் வேலையற்றோர் போன்றோர்கள் ஒரு சிறு குழுவாக முதலில் ஒன்று சேர்ந்தார்கள்.அவர்களுக்குள்ளேயே ஒரு ஒழுங்கை ஏற்படுத்திக்கொண்டு அவர்களை பலப்படுத்திக்கொண்டார்கள்.***" டரண்டோவில் வசிக்கும் குடும்பத்தினரின் செயற்குழு***"என்று அவர்களை அழைத்துக்கொண்டார்கள்.பின் கீழ்வரும் வாசகம் அடங்கிய துண்டுபிரசூரத்தினை விநியோகித்தினர்.

***"பெரும் உடல் நலக் கேட்டை உருவாக்கிய குற்றத்திற்கான விலையை யார் கொடுப்பது என்பது அரசு மற்றும் ரிவா குடும்பதிற்குமானது***"என்று கோரியது.பின் 31/7/2012 அன்று,தங்களின் பெயரை ***"சுயமாகவும்,சுதந்திரமாவும் சிந்திக்கும் குடும்பத்தினர் மற்றும் தொழிலாளர்களின் செயற்குழு"*** என்று பெயர் மாற்றம் செய்துகொண்டு,ஆகஸ்டு 2 இல் நடைபெற இருக்கிற வர்த்தக சங்க ஊர்வலத்தில்,கீழ்வரும் நிலைப்பாட்டை உறுதியாக முன்னெடுக்க முடிவு செய்தனர்.

**"வேலைக்கு விலையாக உடல் நலத்தை வைத்து மிரட்டுவதை மறுப்பது"**

ஒரு மூன்ற சக்கர வாகன சின்னமொன்றை தேர்வு செய்து,அதை அவ்வகையான வாகனத்தின் பின்புறத்தில் வைத்துக்கொண்டு,வர்த்தக சங்க ஆலோசனைக்கூட்டத்திற்குள் நுழைகிறார்கள்.பின் அங்கிருந்த மேடையில் ஏறி தங்களின் "வேலை அல்லது உடல்நலம் என்ற மிரட்டலை மறுப்பது" என்ற கோரிக்கையை தெளிவாக விளக்கினர்.

மக்களின் முன் செய்த இம்முயற்சிகளின் வெற்றி பெற்றது.இதன் வெற்றியானது,வர்த்தக சங்கம் மற்றும் இடது சாரி முகாம்களிடம் முரண்பட்டு இருந்தவர்களை ஈர்த்து இவர்களிடம் சேர்க்கும் அளவிற்கு வளர்ந்தது.மேலும் தொழிலாளர் சங்கமானது முதலாளியைப் பாதுகாப்பதில் அக்கரையாக உள்ளதே தவிர தொழிலாளிகளின் தேவைகளில் கரிசனம் கொள்வதில்லை என்று சொல்லி தொழிலாளர் சங்கத்தினை ஏற்றுக்கொள்ள மறுப்பதாக போராட்டக் குழுவினர் அறிவித்தனர்.

இச்சூழ்நிலையை சமாதனம் செய்யும் பொருட்டில், ஆகஸ்டு 17இல் அரசானது காட்சிக்குள் வருகிறது.அது டரண்டோ நீதிபதி பட்ரிசியா டோடிஸ்கோ, வழங்கிய விரிவான பரிந்துரையை சொந்தமாக்கிக்கொண்டு தனது வாதமொன்றையும் சேர்க்கிறது.அது தொழிற்சாலையயை மூடக்கூடாது என்பதாக இருந்தது ! நிலைமை நகரில் மேலும் தீவிரமடைந்து,நாட்டின் தலைப்புச்செய்தியாகவும் விவாதத்திற்குரிய முக்கிய விடயமாவதிற்கு முன்பாக ,சூழ்நிலையை தணிக்கும் முயற்சியாக, சுற்றுச்சூழலை காக்கும் பொருட்டு 146மில்லியன் யூரோவை(இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட 122கோடி ரூபாய்) இல்வா தொழிற்சாலையில் முதலீடு செய்ய இருப்பதாக அதே நாளில், அந்நிறுவனம் அறிவிக்கிறது.இத்தொகை இதற்குமுன் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைக்காக அரசு அறிவித்திருந்த தொகையான 336 மில்லியன் யூரோவுடன் (இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட 282 கோடி ரூபாய்) சேர்ந்துகொள்கிறது.இனி இத்தொழிற்சாலை எந்த சூழல் ஆபத்தையும் விளைவிக்காமால் செயல்படவேண்டுமென்றால் இதுபோல் இன்னும் 5 முதல் 8 பில்லியன் யூரோக்கள்(இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட 482 கோடி முதல் 672 கோடி ரூபாய்) தேவைப்படும். ஆனால் இதற்குமுன், பல ஆண்டுகளாக சுற்றுச்சூழல் மற்றும் மனித உயிர்களுக்கு கடும் அழிவை ஏற்படுத்திய தொழிற்சாலை மாசை பாதி அளவிலாவாது நீக்க எவ்வளவு பில்லியன் ஆகும் என்று கணக்கிடாமல் முதலீடு செய்கிறார்கள் என்பது இங்கு முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய ஒன்றுஅதோடு இங்கு டொராண்டாவில்.சுற்றுச்சூழல் மாசு இல்வாவால் மட்டும் ஏற்படுத்தப்படவில்லை,அருகில் உள்ள அர்செனல் மற்றும் சிமென்ட் தொழிற்சாலைகளிருந்தும் ஏற்படுத்தப்படுகிறது.

பையோம்(FIOM) என்ற உலோக ஆலைத் தொழிளார்களின் சங்கம், நாட்டின் பிற வர்த்தக சங்கத்திடமிருந்து பிரிந்துவர முனைந்த இத்தாலியின் தீவிர இடதுசாரிகளை ஒன்றுசேர்த்து “வேலை மற்றும் உடல்நலம்” என்ற கோரிக்கையின் கீழ் ஒருமைப்படுத்த முயற்சித்தது. அவர்களுக்கு ஆலையை உடனடியாக மூடச்சொல்வதில் எந்த மாற்றக்கருத்தும் இல்லை.

***சுயமாகவும்,சுதந்திரமாவும் சிந்திக்கும் குடும்பத்தினர் மற்றும் தொழிலாளர்களின் கூட்டமைவு,***தினமும் பல்வேறு இடங்களில் தொடர்ச்சியாக சந்தித்து வந்தனர்.ஆகஸ்டு 2 மற்றும் ஆகஸ்டு 17 இல் இரு முறை பெரும் ஊர்வலத்திற்கு அழைப்பு விடுத்தார்கள்.(இத்தாலியின்) மோன்ட்டி அரசைச் சேர்ந்த முக்கிய மந்திரிகள் இருவர் டரண்டோவிற்கு ஆகஸ்டு 17 அன்று வருவதால் அவர்கள் பயணத்திற்கு தடை ஏற்படுத்தக்கூடாது என்ற நோக்கில், அன்றைய ஊர்வலத்திற்கு அரசு விதித்திருந்த தடையையும் மீறி நடைபெற்ற ஊர்வலத்தில் 2000 மேற்பட்டவர்கள் தைரியமாக பங்கேற்று போராட்டத்திற்கு வலு சேர்த்தனர். ஆகஸ்டு 31 இல் ஆயிரக்கணக்கில் திரண்ட இக்கூட்டமைப்பினர் தொழிற்சாலை வளாகத்திற்கு அருகில் சென்று ,தொழிற்சாலையை மூடக்கோரி போராட்டம் நடத்தினர்.போராட்டம் இன்னும் நடைபெறுகிறது.

போராட்டத்தின் முக்கிய கோரிக்கையாய் இன்னும் தொடர்வது,

**தொழிற்சாலையை உடனே இழுத்து மூடு.**

**வேலையிழக்கும் தொழிலார்களின் வருமானத்திற்கு உத்திரவாதம் கொடு.**

**கவனிக்க வேண்டியது என்ன?**

சம அளவில் உள்ள சக்திகளை பயன்படுத்தத்தக்க அளவிலா திறன் இப்போராட்டத்திற்கு இருக்கவேண்டும்.

இக்கூட்டமைவின் பலம் என்ன?முதலில் 30 என்ற எண்ணிக்கையில் ஒன்று சேர்ந்தவர்கள்,நாளுக்கு நாள்200,500,1000,2000 என்று பெருகினார்கள்.தொழிற்சாலைக்கு உள்ளே உள்ள 1000 தொழிலாளர்கள்

இக்கூட்டமைப்பிற்கு ஆதரவு நல்கினர்.அது மொத்த தொழிலார்களின் எண்ணிக்கையில் 10% என்றாலும் பெரும்பாலான தொழிலாளர்கள் வர்த்தக சங்கம் எடுக்கும் முடிவிற்காக காத்திருந்தனர்.

வர்த்தக சங்கம் உடைந்தது. பையோம்(FIOM) தொழிலாளர்கள்

சங்கத்தினர்,இல்வா தொழிற்சாலைக்கு ஆதரவாக எடுத்த முடிவிற்காக CGIL ளை சாடியது. ***சுயமாகவும்,சுதந்திரமாவும் சிந்திக்கும் குடும்பத்தினர் மற்றும் தொழிலாளர்களின் கூட்டமைவின்*** கோரிக்கைக்கு ஆதரவு தரக் கோரியது.

அரசின் ஆதரவு இருப்பதால்,தொழிற்சாலையை மூடும் நிலை வராது என்பதில் முதலாளி தெளிவாக இருந்தார்.மேலும் அரசானது மிக சாமர்த்தியமாக நீதித்துறையை எதிர்கொள்வதை தவிர்த்து விடயத்தை மீண்டும் நீர்ந்துப்போகச்செய்வதில்/கிடப்பில் போடுவதில் மும்முரம் காட்டியது.முதலில் உற்பத்தியை நிறுத்தி,தொழிற்சாலையை மூட உத்தரவிட்ட நீதிமான்கள் பின்னர் அப்படியே தலைகீழாய் பின்வாங்கி தொழிற்சாலையை மூடாமல் சூழல் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ள பரிந்துரைக்கிறார்கள்!இந்நிலையில் செயற்குழுவானது தனது பலத்தை மட்டும் நம்பியே களத்தில் உள்ளது.நீதித்துறையிடம் நம்பிக்கை வைத்தவர்கள் இவ்விடயத்தின் இறுதியில் அளிக்கபட்ட தீர்ப்பால் ஏமாற்றமடைந்தனர்.

இச்செயற்குழு, பல்வேறு தரப்பினரின் குரலாகவே ஒலித்தது.உருக்கு ஆலையில் பணிபுரிந்த தொழிலாளர்கள்,பிற தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்கள்,வேலை இல்லாதோர்,ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் என இப்படி பல தரப்பினர் இதில் பங்கெடுத்தனர்.

நகரின் சுகாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டும்,தொழிலாளிகளின் வருமானத்திற்கு உத்தரவாதம் வழங்கக்கோரியும் ,அந்நகரில் வசிக்கும் மக்கள்,நடுத்தர குடும்பத்தைச்சேர்ந்த தொழிலாளர்கள் என அனைவரும் இச்செயற்குழுவில் இணைந்தனர்.




போராட்டத்தின் முக்கிய அச்சாணியாக திகழ்ந்தது ,வேலை அல்லது உடல்நலம் என்கிற பொய் வாய்ப்பை தைரியமாக மறுத்து ,வருமான உத்திரவாதத்திற்காக உறுதியாக தனித்தன்மையுடன் போராடியது.(இதற்கு முன் நடைபெற்ற போராட்டத்தின் பின் இருந்த வாசகம்"பசியால் மடிவதை விட புற்றுநோய்க்கு சாகலாம்!).பல வருடங்களாக வேலையா அல்லது உடல்நலமா என்று மிரட்டியே,தொழிலாளர்களை வளைத்து முதலாளிகள் லாபமடைந்தார்கள்.கடந்த 40 வருடங்களாக தங்களின் சுகாதாரத்திற்கான போராட்டத்தினை முன்னெடுக்கும் போதெல்லாம் கையாண்ட அதே யுக்தியை தற்போது வரை கையாள்கின்றனர்!

(எங்களை வேலையை விட்டு நீக்க நினைத்தாலும் சரி ,சூழல் பாதுகாப்பக செயல்பாடுகளை உறுதி செய்தாலும் சரி அதற்கான விலை கொடுக்கபோவது முதலாளிதான்)

(இல்வா போராட்டத்தின் தற்போதைய நிலைமை:ஆகஸ்டு 2012 போராட்டத்திற்குப் பின் இல்வா போராட்டசெயல்குழுவினர், தொடர்ச்சியாக ஆலையில் உள்ள தொழிளார்களுக்கு போராட்டக்குழுவின் நிலைப்பாடு குறித்தும்,அதன் நியாங்கள் குறித்தும் விளக்கி புரியவைக்கும் முயற்சிகளை தீவிரமாக

முன்னெடுத்தனர்,ஆனால் அதில் போதுமான வெற்றி கிட்டவில்லை.ஆலைக்கு வெளியிலும் சிறிய அளவிலான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.நிலைமையில் எந்த மாற்றமும் இல்லாமல் அன்று நிலவிய சூழலே இன்றும் நீடிக்கிறது)